# தேவன் கூறியபடி சிறுவர்களுக்கு போதித்தல்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் T1b என்ற பாடத்தை வாசிக்கவும்.


**ஜெபம்:** “அன்பான கர்த்தாவே, உம்மை நேசித்து உமக்குக் கீழ்ப்படியவும், தங்கள் குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் நன்கு விளக்கி உரைக்கவும் எங்கள் பிள்ளைகளுக்கு உதவுவீராக.”

## 1. சிறுவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களை தேவ வார்த்தையைக் கொண்டு ஆயத்தப்படுத்துக.


சிறுவர்களுக்கு யார் போதிக்க வேண்டும்?

பொதுவாக பெற்றோர்களே இயேசுவைப் பின்பற்றும்படி தங்கள் பிள்ளைகளைப் பயிற்றுவித்து, போதித்து, அன்பான கட்டுப்பாட்டுடன் வளர்க்க வேண்டும்.

- யோபுவைப் போல, ஜெபிக்கவும், தேவ வார்த்தையைக் குறித்து பிள்ளைகளோடு பேசவும், கிறிஸ்தவ குடும்பங்களுக்கு ஒரு தினசரி ஜெப வேளை தேவை.
- தகப்பன்கள் செய்ய வேண்டியது பற்றி **எபே.6:4** கூறுவது என்ன?
- பெற்றோர்கள் செய்ய வேண்டியது குறித்து **நீதி.23:13** கூறுவது என்ன?



- பிள்ளைகள் பெரும் பாலும் மற்ற பிள்ளைகளுக்கு சிறந்த முறையில் போதிக்கின்றனர்.



அலெக்ஸ், நீ உன்னுடைய வேலையை நன்றாகச் செய்தாய். மோகனும், ஷாஜியும் தங்கள் வேலையை முடிக்க தயவு செய்து உதவு.

பெரிய பிள்ளைகளாகிய நீங்கள் போதிப்பதற்கு எனக்கு உதவும் போது, நீங்கள் அதிகமாக கற்றுக் கொண்டு, சிறியவர்கள் மேலும் கற்க உதவுகிறீர்கள். தலைவர்கள் ஆவது எப்படி என்றும் கற்றுக் கொள்ளுகிறீர்கள்.

- பிள்ளைகளுக்கு வேதாகமக் கதைகளைக் கூறியும், அவர்களோடு சேர்ந்து ஜெபித்தும், அவர்கள், தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூறக் கேட்டும், வார நாட்களில் கிறிஸ்தவ நண்பர்களும், உறவினர்களும் பிள்ளைகளுக்கு போதிக்க உதவ வேண்டும்.

தாமஸ், நீ மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்தாய். இவ்வாறு உன்னை கனப்படுத்-துவது தகுதியானதே.

நான் போதிப்பதற்காக எனக்கு உதவிய அதே விஷயங்களை வார நாட்களில் மற்ற பிள்ளைகளுக்கு உன்னால் போதிக்க முடியும்.



- ஆசிரியர்களுக்கு பவுல் – தீமோத்தேயு சிறுவர் பாடத்தை மேய்ப்பர்கள் கொடுப்பார்களாக. பெரியவர்களுக்கு வழங்க வேண்டியவைகளை ஆயத்தம் செய்ய முக்கிய ஆராதனைக்கு முன் கொஞ்ச நேரத்தைப் பிள்ளைகளுக்கு ஒதுக்கித் தர வேண்டும்.

**சிறுவர்களுக்கு போதிப்பதற்கான வழிகாட்டுதல்கள்**

- முன் கூட்டியே நன்றாக ஆயத்தம் செய்யவும்.
- கதைகளைக் கூறவும்: சிறுவர்கள் அதை நடித்துக் காட்டவும்.



> இந்த சத்தியத்தை சிறுவர்களால் எவ்வாறு கற்க முடியும்? நான் அறிவேன். அதைக் குறித்த ஒரு வேதக்கதையைக் கூறுவேன். அந்த வகையில் அவர்கள் சிறப்பாகக் கற்றுக் கொள்ளுவார்கள். ஒருவரை ஒருவர் பார்க்கும் படியாக வட்டமாக அமர்ந்தால் சிறந்த முறையில் பங்கேற்க முடியும். பெரியவர்களுக்காக அவர்கள் கதையை நடித்துக் காட்டலாம்.

- ஒவ்வொரு குழந்தைக்காகவும் **ஜெபிக்கவும்.** தேவன் குழந்தைகளின் மேல் அக்கறை உள்ளவர். அவர்களைப் பற்றி வேதாகமம், அடிக்கடி கூறுகிறது.
- மோசே, யோசுவா, எஸ்ரா, செய்தது போல நல்ல துதி ஆராதனைத் தலைவர்களும் மேய்ப்பர்களும் பிள்ளைகளை வெறும் பார்வையாளர்களாக அல்லாமல் பெரியவர்களோடு **சேர்ந்து** எல்லா காரியங்களிலும் ஈடுபடும்படியாக சேர்த்துக் கொள்ளுகின்றனர். பவுல்– தீமோத்தேயு சிறுவர் பாடங்கள், ஆயத்தம் செய்து பெரியவர்களுக்கு வழங்கும் படியான நடவடிக்கைகளை சிறுவர்களுக்கு அளிக்கிறது.
- சிறுவர்கள் **விடுமுறை** நாட்களையும் நிகழ்ச்சிகளையும் விரும்புகிறார்கள். இந்த சமயங்களில் விசுவாசிகள் விளையாட்டுகள், விருந்துகள், பிறந்தநாள் நிகழ்ச்சிகள் போன்றவைகளுக்காக ஒன்று கூடுகின்றனர். விடுமுறை நாட்களை நாம் கொண்டாடும் போது அவர்கள் மகிழ்ச்சியோடு கற்றுக் கொள்ளவும் செய்கின்றனர். சிறுவர்கள் தேவனுடைய மகத்தான செயல்களை மறந்து விடக் கூடாதவாறு கர்த்தர் ஒய்வு நாட்களையும் பண்டிகை நாட்களையும் ஏற்படுத்தினர். (யோவா 4:1-7 : யாத்12:24-27)
- சிறுவர்கள் தங்களுக்கு பிடித்தமான செயல்களை செய்யுமாறு **சுறுசுறுப்பாக** வைத்திருங்கள். பொருட்களை உண்டாக்குவதில் அவர்களுக்கு விருப்பம் அதிகம்.

> பிள்ளைகளாகிய உங்களுக்கு அதிக ஆற்றல் உண்டு. நீங்கள் எதையாவது செய்ய விரும்புவீர்கள். அதனால் அதிக நேரம் உங்களை அப்படியே அமர்ந்திருக்குமாறு கூற மாட்டேன். நீங்கள் சண்டை போட்டால் நான் உங்களைத் திட்ட மாட்டேன். அதற்குப் பதிலாக நான் உண்டாக்குமாறு சில பொருட்களைத் தருவேன். ஏனென்றால் நீங்கள், படைக்கும் ஆர்வம் உள்ளவர்கள். சாமுவேல், வந்து எனக்கு உதவி செய்.



- அவர்கள் **பொருட்களை செய்ய** விரும்புவார்கள்.
- தேவனுக்கு பயப்படும் படியாகவும், அவரில் அன்புகூரும் படியாகவும் சிறுவர்களுக்குக் ற்பியுங்கள். (உபா. 4:10; 6:4-7; சங். 34:11; 111-10)
- சிறுவர்களுடைய பாவங்களைப் பரிசுத்த ஆவியானவர் உணர்த்தும்போது, விசுவாசத்தினால் கிறிஸ்துவின் மன்னிப்பைப் பெறுமாறு அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

- சிறுவர்கள், குறிப்பாக மிகவும் சிறியவர்கள், திரும்பத்திரும்ப கூறுவதையும், செயல்களையும், சத்தத்தையும் விரும்புவார்கள். உதாரணமாக, ஈசாக்கின் மணமகளான ரெபெக்காள் ஒட்டகத்தில் வருவதாகக் கூறும்போது, "ஒட்டகம் நடப்பதைக் கேளுங்கள்" 'கிளாப்' 'கிளாப்' 'கிளாப்' 'கிளாப்' என்று சத்தம் எழுப்பி, ஒட்டகத்தில் பயணம் செய்பவர்கள் மேலும் கீழும் அசைந்து பயணம் செய்வதைப் போல உங்கள் தலையை மேலும் கீழும் அசையுங்கள்.
- ஆசிரியர்கள் சிறுவர்களின் பெற்றோர்களுடன் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- குழந்தைகளை மென்மையாக ஆனால் உறுதியாக கட்டுப்படுத்த வேண்டும்.




- திட்டுவதை விட, விஷயங்களை சரியாகச் செய்யும் போது பாராட்டினால் விஷயங்கள் செம்மையாக நடைபெறும்.

**2. இந்த வாரத்து நடவடிக்கைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுங்கள்.**

- விசுவாசியான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து குடும்ப ஜெபத்தை செய்வது இல்லை என்றால், அவர்களை சந்தித்து ஆரம்பிக்க உதவ வேண்டும்.
- ஆசிரியர்களாக பணியாற்றக் கூடிய விசுவாசிகளை சந்தித்து, இந்த வழிகாட்டுதல்களை அவர்களுக்கு விளக்கவும்.
- முடிந்தால் இன்னும் அனுபவம் உள்ள ஆசிரியர்களோடு இணைந்து பணியாற்ற செய்து புதிய ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவும்.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

நிலங்களைப் பற்றிய இயேசுவின் உவமையை **மாற்கு 4:1-20**ல் இருந்து கூறவும். தேவ வார்த்தையை தேவனுடைய முறையிலேயே கற்க வேண்டும் என்பதை **விளக்கவும்.**

1) அதை நமது **கண்களாலும் காதுகளாலும்** பெற வேண்டும்.

2) அது நமது **ஆத்துமாவில்** வேர் பிடிக்க வேண்டும்.

3) அது **கனிகொடுக்க** வேண்டும்.

இந்தக் கல்வித் தடைபடித்தும் விஷயங்கள் எவை என்று இயேசு கூறியவைகளை நினைவு படுத்துமாறு விசுவாசிகளிடம் கூறவும்.

பெற்றோர்கள் ஏன் பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும் என்பதை **விளக்குக.**

மேலே கூறப்பட்டுள்ள அதற்கான வழிகாட்டுதல்களை **விவரிக்கவும்.**

**குழந்தைகள்** தாங்கள் தயாரித்தவற்றை வழங்கட்டும்.

இயேசு அவர்களுக்காக என்ன செய்தார் என்பதை **பெரியவர்களும்** பெரிய பிள்ளைகளும் சாட்சியாக அறிவிக்கட்டும். குறிப்பாக அவர்கள் சமீபத்தில் இயேசுவை தங்கள் கர்த்தராக விசுவாசித்தவர்களாக இருந்தால் சிறப்பாக இருக்கும்.

உபாகமம் 6:4-7 ஐ வாசித்து கர்த்தரின் பந்தியை அறிமுகப்படுத்துக. அப்பம் பிட்குதல் உட்பட இயேசுவின் எல்லா கட்டளைகளுக்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று **விளக்கவும்.**

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய சிறு **குழுக்களாக** அமர்ந்து உரையாடவும். ஒருவருக்காக ஒருவர் ஜெபித்து, பிள்ளைகளுக்குமேலும் கல்வி செயல்பாடுகளை அளிப்பது குறித்துத் திட்ட மிடவும்.

சேர்ந்து **மனப்பாடம்** செய்க: உபா.6:6-7 .